# சங்க இலக்கியத்தில் கொல்லரின் தொழில் சார் வாழ்வியல்

சு.காளீஸ்வரி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : **21212014022009**
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தழிழாய்வு மையம், தூத்துக்குடி-**628002**,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-**12**
முனைவர் ச. மல்லிகா
நெறியாளர் **&** இணைப்பேராசிரியர் ,தமிழ்த்துறை,
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தழிழாய்வு மையம்,
தூத்துக்குடி-**628002**, தமிழ்நாடு, இந்தியா.

**2**

ஆய்வுச்சுருக்கம்:

சங்க இலக்கியம் தமிழர்களின் கருவூலம். தொன்மைமிக்க இவ்விலக்கியங்கள் மனித வாழ்க்கையை பற்றி கூறுவதனால் தனித்தன்மையுடையனவாக திகழ்கின்றன. மக்களின் வாழ்க்கைப் பயன்பாட்டிற்கு தேவையானப் பொருட்களை செய்துக் கொடுப்பவர்கள் தொழிலாளர்கள். இவர்கள் செய்யும் தொழிலைச் சார்ந்து இத்தொழிலுக்கு பெயர்களும் அமைந்தன. சங்க இலக்கியத்தில் பலவகையான தொழில்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இல்லறப்பயன்பாட்டிற்கும், புறச்செயல்பாட்டிற்கும் தேவைப்படும் பொருட்களை கொல்லர்கள் செய்து தந்துள்ளனர். இல்லறத்திற்கான வீட்டு உபயோகப்பொருட்கள், உண்கலன்கள், பொன்னணிகள் போன்றவையும், புறச்செயல்பாட்டில் போருக்கு உதவும் போர்க்கருவிகள், பிறத்தொழிலுக்கு பயன்படும் தொழில்கருவிகள் முதலியவைகளையும் செய்துள்ளனர். சங்க இலக்கியத்தில் உலைத்தொழிலையும்,கொல்லரின் மதிப்பினையும்,அதன்மூலம் இவர்களின் வாழ்வியலையும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கடவுச்சொற்கள்:

கொல்லர், உலைதொழில், போர்க்கருவிகள், பொன்னணி, உரைக்கல்

முன்னுரை:

பண்டைத் தழிழர்களின் வாழ்வியல் கூறுகளை அறிய அவர்கள் வாழ்ந்த காலத்தில் காணப்படும் இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஒவியங்கள், நாணயங்கள், சிற்பங்கள் போன்றவை துணைப்புரிகின்றன. அவற்றுள் முதன்மையாகத் திகழ்வது இலக்கியங்கள். தமிழில் தோன்றிய சங்க இலக்கியங்கள் தனிச்சிறப்புடையன. இவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டவை. இலக்கியம் என்பது சமுதாய அமைப்பின் பிரதிபலிப்பு. வாழ்வியல் கூறுகள் என்பது

அகம், புறம் என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அகத்தில் இல்லற ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன. புறத்தில் அகம் அல்லாத பிற செய்திகள் கூறப்படுகின்றன.புற வாழ்வியலில் வீரம், கொடை ,தொழில், மனிதநேயம்,அறம் போன்றவை காணப்படுகின்றன. அவற்றுள் தொழில்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாய் அமைகின்றன.சங்ககால பொருளியல் வாழ்வில் கொல்லர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். கொல்லர்களின் தொழில் சார் வாழ்வியலை பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

கொல்லர்- வகையினர்:

சங்க காலத்தில் பல்வேறு உலோகங்கள் காணப்பட்டன. அனைத்திற்கும் பொன் எனும் பொதுப்பெயர் வழங்கப்பட்டது. இரும்பு, பொன்,செம்பு, வெள்ளி ,வெண்கலம் போன்ற உலோகங்களை உருக்கி மக்களுக்குத் தேவையான பயன்பாட்டு பொருளைச் செய்பவர்கள் கொல்லர்கள் எனப்பட்டனர். கொல்லர்கள் கம்மியர் என்றும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு உலோகத்தினைக் கொண்டு கொல்லர்கள் வெவ்வேறு பெயரில் அழைக்கப்பட்டனர்.

| உலோகம் | - | கொல்லர் பெயர் |
|---|---|---|
| இரும்பு | - | இரும்புக்கொல்லர் |
| பொன் | - | பொன் செய் கொல்லர் |
| செம்பு | - | செம்பு கம்மியர், செம்புக்கொட்டிகள் |
| வெண்கலம் | - | கஞ்சக்காரர் |

எனப் பல வகை பெயர்கள் காணப்பட்டாலும் கொல்லர் எனும் பொதுப்பெயரே வழக்கிலிருந்தது

கொல்லரின் கடமை:

சங்கத்தமிழர் களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே எனப் போர்முனையில் நின்று போர் புரிவதனைப் பெருமிதமாகக் கருதினர். அத்தகைய போருக்குத் தேவையான வில், வாள்,ஈட்டி போன்ற போர்க்கருவிகளை வடிவமைத்து கொடு;ப்பவர் இரும்பு செய் கொல்லர்.

" வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே "1 (புறம் -312 )

என வரும் பாடல் போர்க் கருவிகளைச் செய்து கொடுப்பது கொல்லரின் கடமை என்பதை உணர்த்துகிறது.போர்க்கருவிகள் மட்டுமின்றி மக்களுக்குப் பயன்படும் பொருட்களையும் கொல்லர்கள் செய்து கொடுத்தனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுவதற்கும், தானியங்களை அறுவடை செய்வதற்கும், மரம் வெட்டுவதற்கும், வில், வேல்,அம்பு ,அரிவாள், கோடாரி போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர்.

" கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவு தொறும்'' 2 (புறம் - 36)

கொல்லர் அரத்தால் கூர்மையாக்கிய ஒளியமைந்த நீண்ட பிடியுடைய கோடாரியைச் செய்தனர்.

அக்கோடாரியால் மரங்கள் வெட்டிச் சாய்க்கபட்டதை புறநானூற்றுப்பாடல் எடுத்தியம்புகிறது.

ஏழு ஊருக்கு ஓர் கொட்டில்:

கொல்லர்கள் போர்க்கருவிகளோடு பழுதான கருவிகளைச் செப்பனிடுதல், மழுங்கிய கருவிகளைக் கூர்மையாக்குதல் போன்ற தொழில்களையும் செய்துள்ளனர். ஏழு ஊர்களில் உள்ள மக்களுக்குத் தேவையான பொருளைச் செய்ய கொல்லுத்தொழில் கொட்டில் இருந்தள்ளது.

"ஏழுர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலை வாங்கு மிதிதோல்"3 (குறு-172)

என்ற பாடல் கொல்லரின் உலைத்தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஏழு ஊர் மக்களின் பொதுவான தொழிலின் பொருட்டு ஓர் ஊரின் நடுவே அமைந்துள்ள ஒரே ஒரு ஊதுஉலை இடையறாது இயங்கிக்கொண்டிருந்தது. கொல்லரின் அயராத உழைப்பினை அறியமுடிகிறது.

இரும்புக்கொல்லர்:

இரும்பு செய் கொல்லர் கருங்கைக் கொல்லர், கருங்கை வினைஞர், வேல் வடிப்பான் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். கொல்லன் உலைக்களத்தில் தீ மூட்டும் போது¸ கரியை எடுத்து உலையிலே போடுவதானாலும், வெப்பத்தின் காரணமாகவும் கொல்லரின் கைகள் கரிய நிறமுடையதாக இருந்தன, இரும்பைக் காய்ச்சி சம்மட்டியால் ஓங்கி அடிப்பதானாலும் கொல்லரின் கைகள் உரம் ஏறிச் சுரசுரப்பாகக் காணப்பட்டன. இதனால் இவர்கள் கருங்கைக்கொல்லர் எனப்பட்டனர்

"நசைவர்க்கு மென்மை அல்லது பகைவர்க்கு
இரும்பயன் படுக்குங் கருங்கைக் கொல்லன் "4 (புறம்-170)

என்ற புறநானூறு பாடலடி இரும்புக்கொல்லரைக் கருங்கைக் கொல்லர் என்று அழைக்கப்பட்டதனை உணர்ந்துகிறது.

" இரும்பு வடித்தன்ன மடியாமென் தோற்
கருங்கை வினைஞர் காதலஞ் "5 (பெ.பா.ஆ 222-223)

என்ற பாடல் இரும்புக்கொல்லரைக் கருங்கை வினைஞர் என்று குறிப்பிடுகிறது.

"கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே''6 (புறம் -180)

சிறந்த இலைவடிவில் அமைந்த வேலை கூர்மையாக்கித் தா, என வேல்வடிக்கும் கொல்லனை அரசனும் இரந்து வேண்டுவான். அரசரே நேரில் வந்து கொல்லரிடம் போர்க்கருவிகள் செய்து தருமாறு வேண்டுதலால் சங்ககாலத்தில் கொல்லரின் மதிப்பினை அறியமுடிகிறது. இரும்புக்கொல்லரை வேல் வடிப்பவன் என்றும் கூறுவதனைக் காணமுடிகிறது.

உலைக்களம் :

கொல்லர் தொழில் புரியும் இடம் உலைக்களம் எனப்பட்டது. இவ்வுலைக்களத்திலுள்ள துருத்தி, குறடு,உலைமூக்கு, கரி,சம்மட்டி, உலைக்கல், அரம் போன்ற கருவிகள் இரும்புப்பொருட்கள் செய்வதற்குப்பயன்பட்டன. உலைக்களம் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டது. உலைக்களத்தைக் குறிக்கக் ‘கொற்றுறை’ என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டது.

“ பகைவர்க்;கு கோடுநுனி சிதைந்து
கொற்றுறைக் குற்றிய மாதோ வென்றும்” 7 (புறம் -95)

என்ற புறநானூற்றுப் பாடல்வழி கொல்லன் உலைக்களம் கொற்றுறை என அழைக்கப்பட்டதனை அறியமுடிகிறது.

பொன் செய் கொல்லர்:

பொன்னை உருக்கி அணிகலன்களையும் உண்கலன்களையும்; செய்பவர்கள் பொற்கொல்லர்கள் எனப்பட்டனர். காதணி இகையணி, இடையணி, தலையணி,ஆரம் எனப் பல அணிகலன்களைக் கலை நயத்துடன் செய்தனர். பொற்கொல்லர் அணிகலன்களைச் செய்ய அரம் என்ற கருவியைப் பயன்படுத்தினர்.

“அரம் போழ்ந் தறுந்த கண்நேர் இலங்குவளை’’ 8 (ம.கா -316)

எனும் பாடலடி அரம் எனும் கருவியைப் பயன்படுத்தி கொல்லர்கள் அணிகலன் செய்ததனைப் புலப்படுத்துகிறது. அரத்தால் பொன்னை வெட்டி துண்டுகளாக மாற்றி, உருக்கி அணிகலன்கள் செய்துள்ளனர்.

“பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானே அரசன் யானே கள்வன்”9 ( சிலம்பு –வழக் காதை 74-75)

எனச் சிலம்பு பொன்செய் கொல்லனைப் பாடுவதனைக் காணமுடிகிறது.

பொன்னணி இழைதல்:

அணிகலனின் பகுதிகளைத் தனித்தனியாகச் செய்து பின் பொடிஊதிப் பற்ற வைப்பர். பற்ற வைத்த இடம் நிறத்தால் மாற்றமடையும். அம்மாற்றத்தைப் போக்கி அணிகலனை ஒரே நிறமுடையதாக மாற்ற ஊது உலையிலிருந்து எடுத்த அணிகலனில் நீரை ஊற்றி ஒரே நிறமுடையதாக மாற்றுவர்.

“காலவை சுடு பொன் வளைஇய ஈர் அமை சுற்றொடு
பொடி இழற் புறம் தந்த செய்வுறு கிண்கிணி
உடுத்தவை கைவினைப் பொலிந்த காசு அமை பொலங்காழ்’’ 10 (கலி - 85 )

என்ற கலித்தொகைப் பாடலடிகள் காலில் அணியும் சதங்கை, கழுத்தணியான காசுமாலை,கிண்கிணி போன்ற அணிகலனை வடித்துள்ளனர் என்பதை விளக்குகிறது.

“மாண உருக்கி நன்பொன்தணி உறீஇ ”11 (கலி -117 )

பொன்னில் மணிகளைப் பதித்தும் அணிகலன்களைச் செய்துள்ளனர்.

“ கருங்கால் வேங்கை நாள் உறு புதுப்பூ

பொன்செய் கம்மியன் கைவினை கடுப்ப’’12 (நற் - 25)

என்ற பாடல் பொற் கொல்லரைப் பொன்செய் கம்மியன் என்று குறிப்பிடுகிறது.

பொன்-தரம் ஆராய்தல்:

சங்க காலத் தமிழர் பொன்னின் தரம் அறியும் திறனைப் பெற்றிருந்தினர். பொன்னின் தரம் அறிவதற்கு உரைக்கல்லைப் பயன்படுத்தினர். பொன்னின் தரமறிபவர்கள் பொலந்தெரி மாக்கள் என்று அழைக்கப்பட்டனர்.

“ நறுந்தாது ஆடிய தும்பி பசுங்கேழ்ப்

பொன்னுரை கல்லின் நல்நிறம் பெறூஉம்’’ 13 (நற் - 25)

என்ற பாடல் உரைக்கல்லின் மூலம் பொன்னின் தரம் ஆராயப்பட்டதை விளக்குகிறது.

“ பொலந்தெரி மாக்கள் கலங்கஞ் ரொழித்தாங்கு ”14 (சிலம்பு ஊர்காண் கா-203)

சிலப்பதிகாரம் பொற்க்கொல்லர்க்குப் பொலந்தெரி மாக்கள் என்ற பெயர் வழங்கப்பட்டதைக் கூறுகிறது.

செம்பு கம்மியர் :

இரும்பு, பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு பொருட்கள் செய்யும் கொல்லர்கள் இருந்ததைப் போல செம்பு¸ வெண்கலம் முதலிய உலோகங்களை உருக்கிப் பயன்பாட்டுப் பொருட்கள் செய்பவர்களும் இருந்தனர். வெண்கலத்தை உருக்கிக் கலன் செய்பவர் ‘கஞ்சக்காரர்’ என்றும் செம்பினால் கலன் செய்பவர் ‘செம்புக்கொட்டி’ என்றும் அழைக்கப்பட்டனர்.

“ --- - - - - - -- --கம்மியர்

செம்பு சொரி பானையின் மின்னி ” 15 (நற் - 153)

எனச் செம்பினால் பானை செய்து சங்கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

உண்கலன்:

சங்க காலத்தில் உணவு உண்ணுவதற்குக் கலங்கள்பயன்படுத்தப்பட்டன. மட்கலங்கள் மட்டுமின்றி பொன், வெள்ளி (வெண்பொன்) போன்ற கலங்களும் பயன்படுத்தப்பட்டன.

“விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித் ” 16 (சி.பாண் 244-245)

என சிறுப்பாணாற்றுப்படை பொற்கலனில் உணவு உண்டதைக் குறிப்பிடுகிறது. உணவு மட்டுமின்றி நீர்மப்பொருட்களையும் பொற்கலனில் ஊற்றிப் பருகியுள்ளனர்.

“ யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்

பொன்செய் புனைகரத்து ஏந்தி நாளும் ”17 (புறம் -56)

என்ற அடிகள் பொன்னால் செய்யப்பட்ட கலனில் கள் ஊற்றிக் குடித்தனைக் குறிப்பிடுகின்றன.

முடிவுரை:

சங்க காலத்தில் பல்வேறு வகையான தொழில்கள் காணப்பட்டன. ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு சிறப்பினைப் பெற்றிருந்தது. கொல்லர் தொழில் மக்களின் புற வாழ்வில் பெரும்பங்கு வகித்தது. கொல்லரால் செய்யப்பட்ட போர்க்கருவிகள் அரசர்களின் வெற்றிக்குத் துணைப்புரிந்தன. கொல்லர்கள் அரசர்களால் பெரிதும் மதிக்கப்பட்டனர்;.மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படும் பயன்பாட்டுப் பொருட்களும் கொல்லரால் செய்யப்பட்டன. வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லரின் கடமையாக இருந்தது. அதனால் கொல்லரின் வாழ்வியல் சிறப்பானதாகக் காணப்பட்டது. பிற கொல்லரைக் காட்டிலும் பொன்செய்கொல்லர்கள்; மக்களிடம் பெரும் மதிப்பினைப் பெற்றிருந்தனர்.

தொகுப்புரை:

உலோலங்களைக் கொண்டு தேவையான பொருட்கள் செய்பவர்கள் கொல்லர் எனும் பொதுப்பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர். இரும்பு,பொன், செம்பு¸ வெண்கலம் என வெவ்வேறு உலேகத்தைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்தவர்களுக்கு அவ்வுலோகத்தால் சிறப்புப் பெயர்கள் காணப்படுகின்றன. இரும்புக் கொல்லரின் கடமை போர்க்கருவிகள் செய்தல் என்பதனை அறிய முடிகிறது. கொல்லர் உலைக்களத்தில் பயன்படுத்தியுள்ள கருவிகளின் பெயர்கள் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. கொல்லரின் கைகள் வலிமை மிக்கவையாகக் காணப்பட்டன. பொற்கொல்லர் பொன்னை உருக்கி அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அணிகலன்களைச் செய்துள்ளனர். உரைக்கல்லின் மூலம் பொன்னின் தரம் கணிக்கப்பட்டது. செம்பை உருக்கிப் பொருட்கள் செய்தவர்கள் கம்மியர் என்றழைக்கப்பட்டனர். இரும்பு¸ பொன்¸ வெள்ளி¸ போன்ற உண்கலன்களின் பயன்பாடும் மக்களிடம் அதிகமாகக் காணப்பட்டமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

அடிக்குறிப்பு:

1.புறநானூறு (புலியூர்கேசிகன்) பா.எண் - 31 அய்யனார் பதிப்பகம் காரனை புதுச்சேரி கூடுவாஞ்சேரி -603202 மு.ப -2016

2. மேலது பா.எண் -36

3. குறுந்தொகை (புலியூர்கேசிகன்) பா.எண் -17 ஜீவா பதிப்பகம் தியாகராய நகர் சென்னை -600017 ப.ஆ -2017

4. புறம் பா.எண் -170

5. பெரும்பாணாற்றுப்படை அ.எண் -222-223 பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி) உ.ஆ வி.நாகராசன் நீயூசெஞ்சுரி;புக் ஹெவுஸ் அம்பத்தூர் சென்னை -98

6. புறநானூறு பா.எண் -180

7. மேலது பா.எண் -95

8. மதுரைக்காஞ்சி அ.எண் 316 பத்துப்பாட்டு மூலமும் உரையும் (இரண்டாம் பகுதி) ) உ.ஆ வி.நாகராசன் நீயூசெஞ்சுரி;புக் ஹெவுஸ் அம்பத்தூர் சென்னை -98

9. சிலப்பதிகாரம் வழக்குரைக்காதை அ. எண் -74-75 உ.ஆ மாணிக்கவாசகன் உமா பதிப்பகம் 18 பவளக்காரத்தெரு சென்னை -1

10. கலித்தொகை (புலியூர்கேசிகன்) பா.எண் - 85 திருமலா பப்ளிகேஷன்ஸ் பழவந்தாங்கல் சென்னை 114 மு..ப – 2017

11. மேலது பா.எண் -117

12. நற்றிணை (வேங்கடராமன் ப.ஆ) பா.எண் -25 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர் சென்னை 600098 மு.ப 2004

13. மேலது பா.எண் -25

14. சிலம்பு ஊர்காண்காதை அ .எண் --203

15. நற்றிணை பா.எண் -153

16. சி;றுபாண்ணாற்றுப்படை அ.எண் -243-244 பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதற்பகுதி) உ.ஆ இரா.மோகன்; நீயூசெஞ்சுரி;புக் ஹெவுஸ் அம்பத்தூர் சென்னை -98

17. புறநானூறு பா.எண் -56